# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 12

More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 3 Questions

21. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______________.

A) நீலம்வான்

B) நீளம்வான்

**C) நீலவான்**

D) நீலவ்வான்

22. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______________.

A) இல்லாதுஇயங்கும்

B) இல்லாஇயங்கும்

**C) இல்லாதியங்கும்**

D) இல்லதியங்கும்

23. எந்திரமனிதன் 'ரோபோ' பற்றிய சரியான கூற்று எது?

I. காரல் கபெக் (Karel capek) என்பவர் 'செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர். இவர் 1920ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார்.

II. அதில் "ரோபோ" (Robot) என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார். ரோபோ என்ற சொல்லுக்கு 'அடிமை' என்பது பொருள்.

III. ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாக அந்த நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இவ்வாறு ரோபோ என்னும் சொல் வழக்கத்திற்கு வந்தது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

24. தானியங்கிகள் பற்றிய சரியான கூற்று எது?

I. மனிதர்கள் தம் வேலைகளை எளிதாகச் செய்ய முதலில் எந்திரங்களைக் கண்டுபிடித்தனர். அவற்றை இயக்குவதற்கு மனித ஆற்றல் தேவைப்பட்டது. இக்குறையைப் போக்க மனிதன் கண்டுபிடித்தவையே தானியங்கிகள்.

II. நுட்பமான, கடினமான, ஒரே மாதிரியான வேலைகளை மனிதரைவிட விரைவாகத் தானே செய்துமுடிக்கும் எந்திரமே தானியங்கி ஆகும். ஒவ்வொரு தானியங்கியிலும் ஒரு கணினி இணைந்து இருக்கும். தானியங்கியின் செயல்களை அந்தக் கணினி கட்டுப்படுத்தும்.

III. இவ்வகைத் தானியங்கிகள் இன்று பல தொழில் நிறுவனங்களில் பயன்பட்டு வருகின்றன. இவை பயன்படும் இடத்திற்கு ஏற்ற வகையில் எந்திரக் கைகள், நகரும் கால்கள், சூழ்நிலைகளை உணர்வதற்கான நுண்ணுணர்வுக் கருவிகள் (Sensors) ஆகியவற்றுடன் உருவாக்கப்படுகின்றன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III அனைத்தும் தவறு

**D) I, II, III அனைத்தும் சரி**

25. மனித முயற்சிகளுக்கு மாற்றாகத் தானே இயங்கும் எந்திரம் தானியங்கி ஆகும்."இவை தோற்றத்தில் மனிதர் போல இல்லாமலும் இருக்கலாம். ஆனால் மனிதர்களைப் போலச் செயல்களை நிறைவேற்றும்" என்று ____________________ கலைக்களஞ்சியம் தானியங்கிகளுக்கு விளக்கம் தருகிறது.

A) மால்வேசி

B) சுகாவே

**C) பிரிட்டானிக்கா**

D) இவற்றில் ஏதுமில்லை

26. _______________ –ஆம் ஆண்டு மே மாதம் சதுரங்கப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ் என்பவர் கலந்து கொண்டார். ஐ.பி.எம். என்னும் நிறுவனம் உருவாக்கிய டீப் புளூ (Deep blue) என்னும் மீத்திறன் கணினி (Super Computer) அவருடன் போட்டியிட்டு, வெற்றி பெற்றது.

A) 1994

B) 1965

C) 1967

**D) 1997**

27. "உலகிலேயே முதன்முதலாக __________ நாடு ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளது. அந்த ரோபோவின் பெயர் 'சோபியா'. மேலும் ஐக்கிய நாடுகள் சபை 'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டத்தைச் சோபியாவுக்கு வழங்கியுள்ளது. உயிரில்லாத ஒரு பொருளுக்கு ஐ.நா.சபை பட்டம் வழங்குவதும் இதுதான் முதல் முறை.

A) மலேசியா

B) அமெரிக்கா

C) ரஷ்யா

**D) சவுதி அரேபியா**

28. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ______________.

A) நூலறிவு

**B) நுண்ணறிவு**

C) சிற்றறிவு

D) பட்டறிவு

29. தானே இயங்கும் எந்திரம் _____________.

A) கணினி

**B) தானியங்கி**

C) அலைபேசி

D) தொலைக்காட்சி

30. 'நின்றிருந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________.

A) நின் + றிருந்த

**B) நின்று + இருந்த**

C) நின்றி + இருந்த

D) நின்றி + ருந்த

31. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.

A) அவ்வு + ருவம்

**B) அ + உருவம்**

C) அவ் + வுருவம்

D) அ + வுருவம்

32. மருத்துவம் + துறை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________.

A) மருத்துவம்துறை

B) மருத்துவதுறை

C) மருந்துதுறை

**D) மருத்துவத்துறை**

33. செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________.

**A) செயலிழக்க**

B) செயல்இழக்க

C) செயஇழக்க

D) செயலிலக்க

34. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ________________.

A) போக்குதல்

B) தள்ளுதல்

C) அழித்தல்

**D) சேர்த்தல்**

35. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் _________________.

**A) அரிது**

B) சிறிது

C) பெரிது

D) வறிது

36. அப்துல் கலாம் அவர்களுக்கு தமிழில் மிகவும் பிடித்த புத்தகம் எது?

A) சிந்து சமவெளி நாகரீகம்

**B) திருக்குறள்**

C) கலிங்கத்துப்பரணி

D) இவற்றில் ஏதுமில்லை

37. கீழ்க்கண்டவற்றுள் எந்த குறள் அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கைக்கு வலுசேர்த்தது?

**A) அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்**

B) அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

C) பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற

D) இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

38. 'லிலியன் வாட்சன்' எழுதிய, விளக்குகள் பல தந்த ஒளி (Lights from many lamps) என்னும் நூலையும் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றேன் – என்று கூறியவர் யார்?

A) பெரியார்

B) அண்ணா

C) காந்தி

**D) அப்துல் கலாம்**

39. போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையைக் கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சி தான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது – என்று கூறியவர் யார்?

A) பெரியார்

B) நேரு

C) காந்தி

**D) அப்துல் கலாம்**

40. சுதந்திர இந்தியாவின் வெற்றிகளாக – கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம். தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுள்ளோம். எவ்வகையான செயற்கைக் கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.

II. அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளோம். நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.

III. பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை அக்னி மற்றும் பிரித்வி ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, III மட்டும் சரி

winmeen.com